# முன்னேற்ற அறிக்கை

## 2022


பிரதம அமைச்சர் அலுவலகம்
58, சேர் ஏர்னஸ்ட்த சில்வா மாவத்தை
கொழும்பு 07

| | |
|---|---|
| தொலைபேசி | **: 011-2575317** |
| பெக்ஸ் | **: 011-2575310** |
| மின்னஞ்சல் முகவரி | : info@pmoffice.gov.lk |
| இணையத்தளம் | : www.pmoffice.gov.lk |


*(2022.09.30 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது)*

# உள்ளடக்கம்

**1.0 அறிமுகம் ..........................................................................................................01**

1.1 நிறுவனத்தின் தூரநோக்கு..........................................................................................................01

1.2 நிறுவனத்தின் செயற்பணி..........................................................................................................01

1.3 முன்னுரிமைகள்..........................................................................................................02

**2.0 கொள்கைகளை வகுத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ........................03**

2.1 நிகழ்ச்சிகள் ஏற்பாடு ..........................................................................04

2.2 திட்டமிடல் மற்றும் அறிக்கையிடல்..................................................................11

2.2.1 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்தல்......11

2.2.2 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDG's) அடைந்துகொள்வதன் செயல்திறன் அறிக்கையைத் தயரித்தல்................11

2.2.3 வருடாந்த செயல்திறன் அறிக்கை வரைவு மற்றும் இறுதி செயல்திறன் அறிக்கையைத் தயாரித்தல் ........................................................................12

2.2.4 வருடாந்த செயல்திறன் அறிக்கையின் அடிப்படையில் ஆண்டின் சகல காலாண்டுகளுக்கும் முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் ...........................12

2.3 பாராளுமன்ற மற்றும் அமைச்சரவை அலுவல்கள் ................................................12

2.3.1 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்/ அமைச்சரவைக் குறிப்புக்கள் சம்பந்தமான அலுவல்கள்..........................................................................................12

2.3.2 அமைச்சரவைப் பத்திரங்களின் சாராம்சக் குறிப்புக்களைத் தயாரித்தல் .................13

2.3.3 அமைச்சரவைப் பத்திரங்கள் சம்பந்தமான தரவு அமைப்பினை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல் ...........................................................................13

2.3.4 பிரேரணை அங்கீகாரங்களைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் .........................13

2.3.5 2022.01.01 ஆந் திகதி முதல் 2022.09.30 வரை தயாரிக்கப்பட்ட வாய் மூலமான வினாக்களுக்கு வரைவு செய்யப்பட்ட பதில்கள் ...............................................13

2.3.6 பாராளுமன்ற அறிக்கைகளைச் சபையில் சமர்ப்பித்தல் ......................................15

**3.0 சட்ட அலுவல்கள் ..................................................................16**

**4.0 சமய அலுவல்கள் ..................................................................18**

4.1 சமய அலுவல்கள் சம்பந்தமாக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான அலுவல்களை மேற்கொள்ளுதல் ..........18

4.2 போயா தின தர்மப் பிரசங்க நிகழ்ச்சிகளை நடாத்துதல் ......................................18

4.3 ஆசிச் செய்திகள் மற்றும் அனுதாபச் செய்திகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் ..................................................................19

4.4 விசேட சமய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ..................................................................19

**5.0 பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல் ..................................................................20**

5.1 பொதுசனத் தொடர்புகள் பிரிவின் ஆவண முகாமைத்துவ அமைப்பு (Document Management System) ..................................................................21

**6.0 முறையான மற்றும் சிறந்த தாபனச் செயற்பாடு ..........................................23**

6.1 நிர்வாக மற்றும் நடவடிக்கைகள் முகாமைத்துவம் ..............................................23

6.2 மனித வள அபிவிருத்தி ..................................................................23

6.3 பிரதம அமைச்சர் அலுவலகத்தினுள் உற்பத்தித்திறன் எண்ணக்கருவைச் செயற்படுத்தல் ..................................................................25

6.4 அரச செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல் (டிஜிட்டல்மயப்படுத்தல்) ..................................25

6.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம் ..................................................................26

6.6 போக்குவரத்து அலுவல்கள் ..................................................................28

**7.0 சர்வதேச அலுவல்கள்..................................................................29**

**8.0 ஊடகம் மற்றும் தொடர்பாடல் ..................................................................31**

8.1 ஊடக மற்றும் தொடர்பாடல் அலுவல்கள் செயற்பாடு ........................32

**9.0 நிதி முன்னேற்றம் ..................................................................34**

## 1.0 அறிமுகம்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதம அமைச்சர் அவர்களின் உத்தியோகபூர்வ கடமை அலுவல்களை செயற்படுத்துகின்ற பிரதம அமைச்சர் அலுவலகமானது, அரச கொள்கைகளுக்கு அமைவாக பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல், ஒருங்கிணைப்பு மற்றும் தலைமைத்துவத்தை வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்கிறது.

மேலும், அரசாங்கத்தின் அபிவிருத்திச் சவால்களை வெற்றிகொள்வதற்குத் தேவையான கொள்கைகளை வகுப்பதற்குப் பங்களிப்புச் செய்தல், சிறந்த அரச மற்றும் சர்வதேசத் துறைகள் சார்ந்த ஒருங்கிணைப்பு மற்றும் மக்களை மையப்படுத்திய அணுகுமுறையொன்று ஊடாக நிலைபேறான முறையில் நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்குப் பங்களிப்புச் செய்தல் என்பனவும் நிதமும் மேற்கொள்ளப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 ஆந் திகதி முதல் 2022 மே மாதம் 09 ஆந் திகதி வரை கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களும், 2022 மே மாதம் 12 ஆந் திகதி முதல் 2022 ஜூலை 20 ஆந் திகதி வரை கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களும், தற்போதைய பிரதம அமைச்சர் கௌரவ தினேஷ் குணவர்தன அவர்கள் 2022 ஜூலை 22 ஆந் திகதி முதலும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதம அமைச்சராகப் பணியாற்றுகிறார்.

### 1.1 நிறுவனத்தின் தூரநோக்கு

“சுயாதீன, இறைமையுள்ள மற்றும் சௌபாக்கியமிக்கதோர் இலங்கை”

### 1.2 நிறுவனத்தின் செயற்பணி

“இலங்கை மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் பொருட்டும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் அரச, வெளிநாட்டுத் தூதரகங்கள், ஐக்கிய நாடுகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடையே சிறப்பான ஒருங்கிணைப்பினைப் பேணி நல்லாட்சிமிக்க சிறந்ததோர் அரச பொறிமுறையொன்றுக்கான தலைமைத்துவத்தை வழங்குதல்”

## 1.3 முன்னுரிமைகள்

- அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்காக சகல அமைச்சுக்கள் மற்றும் நிறுவன அமைப்புக்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்
- கௌரவ பிரதம அமைச்சர் தலைமை தாங்கும் பல்வேறு குழுக்கள் மற்றும் கூட்டங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் முன்னேற்றம் பற்றிய பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- கௌரவ பிரதம அமைச்சரிடம் பாராளுமன்றத்தில் வினவப்படும் வினாக்களுக்குத் துரிதமாக பதில்களைத் தயாரித்தல்
- கௌரவ பிரதம அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்களுக்கு ஏற்புடைய அலுவல்களை ஒருங்கிணைத்தல்
- பல்வேறுபட்ட அரச நிறுவனங்கள் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு, வழிகாட்டல், கண்காணிப்பு மற்றும் தொடராய்வு
- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு இராஜதந்திரத் தொடர்புகளைப் பேணிச் செல்வதற்கும் அவற்றை விருத்தி செய்வதற்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்
- கௌரவ பிரதம அமைச்சரின் வெளிநாட்டு விஜயங்களுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு மற்றும் வழிநடாத்தல்
- தேசிய மற்றும் சமய வைபவங்கள் மற்றும் சமூக உபசரணைச் சேவைகளை அரச அனுசரணையுடன் ஏற்பாடு செய்தல்
- கௌரவ பிரதம அமைச்சரிடம் முன்வைக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளை உரிய நிறுவனங்களிடம் முன்வைத்து நிவாரணத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் ஒழுங்குபடுத்தல்
- பிரதம அமைச்சர் அலுவலகம், அலரி மாளிகை, கௌரவ பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்ல அமைப்புக்களை உரிய முறையில் பராமரித்துப் பேணி வரல்
- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அன்றாட நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- கௌரவ பிரதம அமைச்சர் கலந்துகொள்ளும் அரச மற்றும் தேசிய வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளின்போது ஊடக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

## 2.0 கொள்கைகளை வகுத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி

அரசாங்கத்தின் அபிவிருத்திக் கடமைப்பொறுப்பினை அடைந்துகொள்வதற்குத் தேவையான கொள்கைகளை வகுப்பதற்கு அவசியமான பங்களிப்புக்களைச் செய்தல், சிறந்த அரச ஒருங்கிணைப்பு மற்றும் மக்களை மையப்படுத்திய அணுகுமுறையொன்று ஊடாக நிலைபேறாக நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு வசதிகளை வழங்குதல் என்பன பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கேற்ப தேவையான சந்தர்ப்பங்களில் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வழிநடாத்தல், கண்காணித்தல் மற்றும் தொடராய்வு செய்தல், மூலோபாயத் திட்டங்களைத் தயாரிப்பதற்குப் பங்களிப்புச் செய்தல், ஒருங்கிணைத்தல் என்பனவும் நிதமும் மேற்கொள்ளப்படுகின்றன.

கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் அல்லது பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் நடாத்தப்படும் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், சந்திப்புக்களை ஏற்பாடு செய்தல் மற்றும் அந்த சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களைத் தொடராய்வு செய்தல், பிரதம அமைச்சர் அவர்களினால் இராஜதந்திரரீதியாக முன்வைக்கப்படுகின்ற கடிதங்கள், விஞ்ஞாபனங்கள், அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் தொடராய்வு செய்தல் என்பன பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் வெளிநாட்டு அரசுகள் மற்றும் நிறுவனங்களுடன் பிரதம அமைச்சர் சார்பில் ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு அரசுகள் மற்றும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதுடன், விசேடமாக பின்வரும் துறைகள் ஊடாக கொள்கை வகுத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- வலுசக்தித் துறையினை அபிவிருத்தி செய்வதற்காகப் பின்பற்ற வேண்டிய கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் இலக்குகளை விதந்துரைப்பதற்கான அமைச்சரவை உபகுழுவின் ஒருங்கிணைப்பு அலுவல்கள்
- தொடர்ச்சியாக எரிவாயு வழங்கலைப் பேணிச் செல்வது தொடர்பான அமைச்சரவை உபகுழுவின் ஒருங்கிணைப்பு அலுவல்கள்
- பல்வேறு அபிவிருத்தி மூலோபாயத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்களைச் செய்தல்

- பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களை மீள் முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்துவதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவுக்கு ஏற்புடைய அலுவல்கள்
- உள்நாட்டு, வெளிநாட்டு வருமான உருவாக்கல் முன்மொழிவுகள் பகுப்பாய்வு மற்றும் அவற்றைச் செயற்படுத்துவதற்கு ஏற்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்
- முக்கிய இலக்குகள் தொடர்பாக விசேட செயல்திறன் குழுக்களை நிறுவுதல் மற்றும் ஏற்புடைய ஒருங்கிணைப்பு
- ஏனைய அமைச்சரவை உபகுழுக்களின் ஒருங்கிணைப்பு அலுவல்கள்
- உணவுப் பாதுகாப்பு மற்றும் போசணை தொடர்பான தொழிநுட்ப ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பு
- உணவுப் பாதுகாப்பு துரித தேசிய நடவடிக்கை - கடற்றொழில் மற்றும் கால்நடை வளங்கள் தேசிய குழுவுக்கு ஏற்புடைய அலுவல்கள்
- வாழ்வாதார மற்றும் விசேட பொருளாதார நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் வசதிகளை வழங்குதல்
- பல்வேறு விடயத் துறைகளில் ஈடுபடுகின்ற தொழில்சார் நிபுணர்களின் தொழில்சார் சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தலையீடு செய்தல்
- சீன - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கு ஏற்புடைய அலுவல்கள்
- அரச நியதிச்சட்ட நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் போன்றவற்றுக்கான நியமனங்களுக்கு ஏற்புடைய விதந்துரைகளை வழங்குதல்

## 2.1 நிகழ்ச்சிகள் ஏற்பாடு

- பிரதம அமைச்சர்/ பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் நடாத்தப்படுகின்ற கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்
- கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் சார்ந்த தொடராய்வுச் செயன்முறை
- கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களுக்குத் தேவைக்கேற்ப பின்னணி சாத்தியவள ஆய்வுகளைச் செய்தல்

- பல்வேறு தரப்பினரிடமிருந்து பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கும் கடிதங்கள் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள்
- பிரதம அமைச்சர் அவர்கள் பதவிவழி அடிப்படையில் தலைமை வகிக்கின்ற கட்டுப்பாட்டுச் சபைகளின் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு அலுவல்கள்
- பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் கள அடிப்படையில் மற்றும் பல்வேறு அமைச்சுக்கள் ஊடாக நடாத்தப்படுகின்ற சம்மேளனங்கள், கருத்தரங்குகள் மற்றும் வைபவங்கள் சார்ந்த ஒருங்கிணைப்பு மற்றும் ஏற்பாட்டு அலுவல்கள்

முன்னாள் பிரதம அமைச்சர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் அறிவுறுத்தலின்படி 2022 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் 2022 மே 09 ஆந் திகதி வரையான காலத்தினுள் விசேட கவனம் ஈர்க்கப்பட வேண்டிய பல்வேறு துறைகள் மற்றும் சிக்கல்கள் தொடர்பாக கண்டறிவதற்கும், அதற்குத் தேவையான ஆலோசனைகள், வழிகாட்டல்களுக்காகவும் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் ஏப்ரல் 31 ஆந் திகதி வரை முன்னாள் பிரதம அமைச்சர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலின் கீழ் நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்**

| # | கூட்டம் | இடம்பெற்ற திகதி | மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்/ தொடராய்வு செய்த விடயங்கள் |
|---|---|---|---|
| **1.** | அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.01.04 | 05 |
| **2.** | உலக மரபுரிமை சீகிரியா புதிய நகரினை முறையாக மீள் கட்டமைப்பது தொடர்பான கலந்துரையாடல் | 2022.01.11 | 07 |
| **3.** | மத்திய கலாசார நிதியத்தின் பதவிகள் சார்ந்து ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல் | 2022.01.12 | 01 |
| **4.** | உலக மரபுரிமை சீகிரியா புதிய நகரினை முறையாக மீள் கட்டமைப்பது தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்புடைய முன்னேற்றத்தை ஆராயும் கலந்துரையாடல் | 2022.01.27 | 14 |
| **5.** | இளைஞர் யுவதிகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் | 2022.01.31 | 12 |

| | | | |
|---|---|---|---|
| **6.** | அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.02.14 | 07 |
| **7.** | நகர அபிவிருத்தி மற்றும் கொழும்பு நகர மீளுருவாக்க நிகழ்ச்சித்திட்டம் - கருத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் | 2022.02.23 | 09 |
| **8.** | கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் அமைச்சுப் பதவி வகிக்கின்ற அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுடன் நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் | 2022.03.08 | - |
| **9.** | அங்கவீனம் தொடர்பான தேசிய செயல்திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் | 2022.03.09 | 10 |
| **10.** | அகில இலங்கை தெலுங்குக் கலைஞர்களின் கலாசார சங்கத்துடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.03.11 | 11 |
| **11.** | மிகிந்தலை வர்த்தக நகரக் கருத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் | 2022.03.24 | 08 |
| **12.** | பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் | 2022.03.25 | - |
| **13.** | ஸ்ரீ சாலவன போதி மகா விகாரையின் புதிய தாதுக் கோபுரம் கொண்ட சீமா மாலக்கயவை சம்புத்த சாசனத்திற்கு பூஜை செய்யும் வைபவம் தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடல் | 2022.03.29 | 07 |
| **14.** | தற்போதைய பொருளாதாரச் சவால்கள் தொடர்பான புத்திஜீவிகள் கலந்துரையாடல் | 2022.03.29 | - |
| **15.** | உத்தேச சீன - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக இந்நாட்டுத் தரப்பினருடன் நடாத்தப்பட்ட இரண்டாவது சுற்றுக் கலந்துரையாடல் | 2022.04.26 | 04 |

**முன்னாள் பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களின் அறிவுறுத்தலின்படி 2022 ஆம் ஆண்டின் மே மாதம் 01 ஆந் திகதி முதல் ஜூலை மாதம் 31 ஆந் திகதி வரை நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்**

| # | கூட்டம் | இடம்பெற்ற திகதி | மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்/ தொடராய்வு செய்த விடயங்கள் |
|---|---|---|---|
| **1.** | கமத்தொழில், உரம் மற்றும் பெருந்தோட்டத் துறையின் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல் | 2022.05.17 | 05 |
| **2.** | நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பான விசேட கலந்துரையாடல் | 2022.05.14 | 03 |
| **3.** | இலங்கை உணவு இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்களின் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல் | 2022.05.14 | 02 |
| **4.** | அத்தியாவசிய சேவைகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் | 2022.05.15 | 05 |
| **5.** | அத்தியாவசிய சேவைகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் | 2022.05.16 | 11 |
| **6.** | அத்தியாவசிய சேவைகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் | 2022.05.17 | 04 |
| **7.** | கமத்தொழில், உரம் மற்றும் பெருந்தோட்டத் துறையின் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல் | 2022.05.18 | 03 |
| **8.** | உணவுப் பாதுகாப்பு, கமத்தொழில், உரம் மற்றும் பெருந்தோட்டத் துறையின் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல் | 2022.05.23 | 13 |
| **9.** | பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வரவுசெலவுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் | 2022.05.23 | 06 |
| **10.** | இந்திய கடன் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் | 2022.05.23 | 04 |
| **11.** | வங்கியாளர்களுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் | 2022.05.26 | 04 |
| **12.** | பயிர்ச்செய்கை மற்றும் கமத்தொழில் ஊக்குவிப்புக் குழுக் கலந்துரையாடல் | 2022.05.27 | 16 |
| **13.** | கமத்தொழில் துறையின் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல் | 2022.05.27 | 04 |
| **14.** | நகரக் கமத்தொழில் அலுவல்கள் ஊக்குவிப்பு உப குழுவின் கலந்துரையாடல் | 2022.05.27 | 06 |
| **15.** | நிதியமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.05.30 | 11 |

| | | | |
|---|---|---|---|
| 16. | எரிபொருள் வழங்கலுக்காக அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளும் கலந்துரையாடல் | 2022.05.31 | 09 |
| 17. | இணைந்த வணிக சபையுடனான கலந்துரையாடல் | 2022.06.02 | - |
| 18. | எரிவாயு நெருக்கடி தொடர்பான கலந்துரையாடல் | 2022.06.05 | 02 |
| 19. | பொருளாதார நிலைமை தொடர்பான கலந்துரையாடல் | 2022.06.05 | 01 |
| 20. | எரிபொருள் நெருக்கடி தொடர்பான கலந்துரையாடல் | 2022.06.05 | 01 |
| 21. | கமத்தொழில் துறையின் தற்கால சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல் | 2022.06.06 | 12 |
| 22. | இந்தியக் கடன் வசதி தொடர்பாக ஏற்புடைய அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.06.06 | 03 |
| 23. | இந்தியக் கடன் வசதி தொடர்பாக ஏற்புடைய அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.06.08 | 03 |
| 24. | அரிசி ஆலை உரிமையாளர்களின் கடன் சம்பந்தமான கலந்துரையாடல் | 2022.06.15 | 06 |
| 25. | நிர்மாணக் கைத்தொழிலில் நிலவும் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல் | 2022.06.14 | 01 |
| 26. | சுற்றுலாக் கைத்தொழிலில் நிலவும் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல் | 2022.06.14 | - |
| 27. | இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.06.14 | 01 |
| 28. | இந்தியக் கடன் வசதி தொடர்பாக ஏற்புடைய அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.06.15 | 03 |
| 29. | இந்தியக் கடன் வசதி தொடர்பாக ஏற்புடைய அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.06.16 | 06 |
| 30. | உணவுப் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் | 2022.06.17 | 28 |
| 31. | இலங்கை விமானக் கம்பனியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.06.17 | - |
| 32. | எரிபொருள் மற்றும் எரிவாயுக் குழுவின் மீளாய்வுக் கூட்டம் | 2022.06.18 | 05 |
| 33. | பொருளாதார ஒத்துழைப்புக்கான செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் | 2022.06.23 | 07 |
| 34. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறையின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.06.23 | - |

| | | | |
|---|---|---|---|
| **35.** | பால் சார்ந்த உற்பத்தியாளர்களின் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல் | 2022.06.27 | 12 |
| **36.** | உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் | 2022.06.27 | 9 |
| **37.** | உணவுப் பாதுகாப்பு தொடர்பாக மாவட்டச் செயலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.06.29 | 4 |
| **38.** | வங்கி மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கங்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.07.04 | - |
| **39.** | ஆடைக் கைத்தொழில் தொடர்பான கலந்துரையாடல் | 2022.07.05 | - |
| **40.** | வங்கியாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.07.06 | 02 |
| **41.** | கடற்றொழில் துறை எதிர்நோக்குகின்ற சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல் | 2022.07.08 | 10 |

**கௌரவ பிரதம அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்களின் வழிகாட்டலின் கீழ் பல்வேறு விடயத் துறைகளை உள்ளடக்கி 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆந் திகதி முதல் செப்டம்பர் 30 ஆந் திகதி வரை நடாத்தப்பட்ட கூட்டங்கள், கலந்துரையாடல்கள், நிகழ்ச்சிகள்**

| # | கூட்டம்/ கலந்துரையாடல்/ நிகழ்ச்சி | இடம்பெற்ற திகதி |
|---|---|---|
| **1.** | கொரியா நாட்டுத் தூதுவருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.08.17 |
| **2.** | ஈரான் நாட்டுத் தூதுவருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.08.19 |
| **3.** | மாகாண ஆளுநர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.08.19 |
| **4.** | அறநெறிப் பாடசாலைகளுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி | 2022.08.21 |
| **5.** | ஆளுநர்களுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் | 2022.08.23 |
| **6.** | பாலர் பாடசாலைகளுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி | 2022.08.24 |
| **7.** | யுனிசெப் பிராந்தியப் பணிப்பாளர் சந்திப்பு | 2022.08.26 |

| | | |
|---|---|---|
| **8.** | மத்திய கலாசார நிதியத்தின் பிரதிநிதிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.08.26 |
| **9.** | சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.08.28 |
| **10** | சணஸ அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.08.28 |
| **11** | உணவுப் பாதுகாப்பினைத் துரிதப்படுத்தும் தேசிய நடவடிக்கை (கடற்றொழில் மற்றும் கால்நடை வளங்கள் தேசிய குழு) | 2022.08.29 |
| **12** | சர்வதேச உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் பிராந்தியப் பணிப்பாளர் சந்திப்பு | 2022.09.02 |
| **13** | இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.09.03 |
| **14** | இணைந்த ஆடைத் தொழிற்சாலைகள் ஒன்றியத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.09.11 |
| **15** | துருக்கி நாட்டுத் தூதுவருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.09.11 |
| **16** | ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆசியப் பணிப்பாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.09.13 |
| **17** | சர்வதேச பாராளுமன்றச் சங்கத்தின் பொதுச் செயலாளருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.09.13 |
| **18** | வலுசக்தித் துறையினை அபிவிருத்தி செய்வதற்காகப் பின்பற்ற வேண்டிய கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை விதந்துரைப்பதற்கான அமைச்சரவை உபகுழுக் கலந்துரையாடல் -I | 2022.09.13 |
| **19** | மெகா கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் (RAMP –I) | 2022.09.13 |
| **20** | சவுதி நாட்டுத் தூதுவருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.09.18 |
| **21** | உலக விவசாய வனப்பயிர்கள் அமைப்பின் பணிப்பாளர் நாயகத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.09.18 |
| **22** | கம்போஜியா நாட்டு பௌத்த பிக்குமாருடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.09.18 |
| **23** | அனுராதபுர மாவட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தவிசாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.09.21 |
| **24** | ஜப்பான் நாட்டுப் பாராளுமன்றத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | 2022.09.21 |
| **25** | பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களை மீள்முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் (RAMP –II) | 2022.09.21 |

| | | |
|---|---|---|
| **26** | நெல் கொள்வனவு சம்பந்தமாக ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல் | 2022.09.21 |
| **27** | சீன நாட்டுத் தூதுவருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.09.22 |
| **28** | தொடர்ச்சியாக எரிவாயு வழங்கலைப் பேணிச் செல்வது தொடர்பான அமைச்சரவை உபகுழுக் கூட்டம் | 2022.09.23 |
| **29** | இந்திய உயர்ஸ்தானிகருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.09.23 |
| **30** | உணவுப் பாதுகாப்பு மற்றும் போசணை தொடர்பான தொழிநுட்ப ஆலோசனைக் குழு - I | 2022.09.26 |
| **31** | பிரான்ஸ் நாட்டுத் தூதுவருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.09.28 |
| **32** | சீனாவின் 73 ஆவது தேசிய தினக் கொண்டாட்ட நிகழ்வு | 2022.09.29 |
| **33** | கனடா நாட்டு உயர்ஸ்தானிகருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் | 2022.09.30 |

## 2.2 திட்டமிடல் மற்றும் அறிக்கையிடல்

### 2.2.1 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்தல்

2022 ஆம் ஆண்டிற்கு ஏற்புடைய செயல்திட்டம் உரிய திகதியில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், ஆண்டின் சகல காலாண்டுகளுக்கான செயல்திட்டங்கள் காலாண்டுரீதியாகத் தயாரிக்கப்பட்டு உரிய காலப்பகுதிகளினுள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.2.2 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDG's) அடைந்துகொள்வதன் செயல்திறன் அறிக்கையைத் தயாரித்தல்

2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் (SDG) சட்டத்தின் பிரகாரம் சகல நிறுவனங்களும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதன் முன்னேற்றத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கேற்ப 2021 ஆம் ஆண்டிற்கான பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதன் செயல்திறன் அறிக்கை உரிய திகதிக்கு முன்பு தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 2.2.3 வருடாந்த செயல்திறன் அறிக்கை வரைவு மற்றும் இறுதி செயல்திறன் அறிக்கையைத் தயாரித்தல்

2002.09.12 ஆந் திகதிய, 402 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 2.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2021 ஆம் ஆண்டின் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்ன செயல்திறன் அறிக்கையின் வரைவு கணக்காய்வாளர் நாயகத்திற்கும் இறுதி செயல்திறன் அறிக்கை பாராளுமன்றத்திற்கும் உரியவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 2.2.4 வருடாந்த செயல்திறன் அறிக்கையின் அடிப்படையில் ஆண்டின் சகல காலாண்டுகளுக்கும் முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளின் முன்னேற்றத்தை அளவிடுவது முக்கியமானதாகும். எனவே பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு வழங்குவதற்காக காலாண்டுரீதியாக ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளை அளவிடும் நோக்கத்துடன், 2022.01.01 முதல் 2022.09.30 ஆந் திகதி வரை ஏற்புடைய சகல காலாண்டுரீதியான முன்னேற்ற அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு உரிய திகதிக்கு முன்பு கணக்காய்வுப் பிரிவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 2.3 பாராளுமன்ற மற்றும் அமைச்சரவை அலுவல்கள்

### 2.3.1 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அமைச்சரவைக் குறிப்புக்கள் சம்பந்தமான அலுவல்கள்

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்/ அமைச்சரவைக் குறிப்புக்களை வரைவு செய்து அமைச்சரவை அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பது வரையான செயன்முறையை நிறைவேற்றுதல் மற்றும் ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கேற்ப 2022 ஜனவரி 01 ஆந் திகதி முதல் செப்டம்பர் 30 ஆந் திகதி வரை பல்வேறுபட்ட விடயத் துறைகளுக்கு ஏற்புடையவாறு 32 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், 09 அமைச்சரவைக் குறிப்புக்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.3.2 அமைச்சரவைப் பத்திரங்களின் சாராம்சக் குறிப்புக்களைத் தயாரித்தல்

அமைச்சரவைக் கூட்ட அமர்வுகள் இடம்பெறுவதற்கு முன்பு அமைச்சரவை அலுவலகத்தினால் வாராந்தம் கௌரவ பிரதம அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பதற்காக அனுப்பி வைக்கப்படுகின்ற சகல அமைச்சரவைப் பத்திரங்களிலும் உள்ளடங்கியுள்ள விடயங்களை சாராம்சப்படுத்தி பிரதம அமைச்சருக்கு மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளருக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதற்கேற்ப 2022.01.01 ஆந் திகதி முதல் 2022.09.30 ஆந் திகதி வரை 32 அமைச்சரவைப் பத்திர சாராம்சங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.3.3 அமைச்சரவைப் பத்திரங்கள் சம்பந்தமான தரவு அமைப்பினை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல்

சகல அமைச்சுக்களினாலும் தமது விடயப் பரப்புக்கு ஏற்புடைய பணிகள் சம்பந்தமாக அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்/ குறிப்புக்கள், அவற்றுக்கு ஏற்புடைய அவதானிப்புக்கள் மற்றும் தீர்மானங்களும் ஸ்கேன் செய்யப்பட்டு (scan) தரவு அமைப்பினுள் உட்படுத்தி இற்றைப்படுத்தப்படுகின்றன.

### 2.3.4 பிரேரணை அங்கீகாரங்களைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

கௌரவ ஜனாதிபதி அவர்களினால் வர்த்தமானி ஊடாகப் பிரகடனப்படுத்தப்படுகின்ற சட்டரீதியான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள சட்ட வரைவுகள் சம்பந்தமாகவும், கௌரவ பிரதம அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரேரணைகள் சம்பந்தமான பிரேரணை அங்கீகாரங்களைத் தயாரித்து பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. அதற்கேற்ப 2022.01.01 ஆந் திகதி முதல் 2022.09.30 ஆந் திகதி வரை 10 பிரேரணை அங்கீகாரங்கள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.3.5 வாய் மூலமான வினாக்களுக்குப் பதில்களை வரைவு செய்தல்

மேற்குறித்த காலப்பகுதியினுள் கௌரவ ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் விடயப் பரப்புக்கு ஏற்புடையவாறு ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களினால் கௌரவ பிரதம அமைச்சரிடம் வினவப்படுகின்ற வாய் மூலமான வினாக்களுக்குப் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

**2022-01-01 ஆந் திகதி முதல் 2022-09-30 வரை தயாரிக்கப்பட்ட வாய்மூலமான வினாக்களுக்கு வரைவு செய்யப்பட்ட பதில்கள்**

| தொடரிலக்கம் | விடயம் | பதில்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **01** | கௌரவ ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதம அமைச்சரின் விடயப்பரப்புக்கு ஏற்புடையவாறு கௌரவ பிரதம அமைச்சரிடம் வினவப்பட்ட வாய் மூலமான வினாக்கள் | 69 |
| **02** | கௌரவ ஜனாதிபதி அவர்களின் விடயப்பரப்புக்கு ஏற்புடைய அமைச்சுக்கள் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்திற்கு ஏற்புடைய விடயங்கள் சம்பந்தமான வாய் மூலமான வினாக்கள் | 50 |
| **03** | கௌரவ பிரதம அமைச்சரின் விடயப்பரப்புக்கு ஏற்புடைய அமைச்சுக்கள் மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு ஏற்புடைய விடயங்கள் சம்பந்தமான வாய் மூலமான வினாக்கள் | 19 |
| **04** | பாராளுமன்றக் கூட்ட சந்தர்ப்பத்தில் வினவப்படும் வாய் மூலமான வினாக்கள் (பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.) | 08 |
| **05** | சபை ஒத்திவைப்புப் பிரேரணைகள் (பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.) | 04 |
| **06** | நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் வினவப்படும் வினாக்கள் (பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.) | 05 |

## 2.3.6 பாராளுமன்ற அறிக்கைகளைச் சபையில் சமர்ப்பித்தல்

கௌரவ ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் ஆகியோரின் விடயப்பரப்பின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பான வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில், விசேடமாக வருடாந்த அறிக்கைகள், செயற்திறன் அறிக்கைகள் மற்றும் கணக்கறிக்கைகள் என்பவற்றைப் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், இது வரைக்கும் கீழுள்ள விடயங்களின் கீழ் 14 அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கைகள் பின்வருமாறு.

- **செயற்திறன் அறிக்கைகள்**
  i. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு - 2020
  ii. நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை - 2020
  iii. நிதி ஆணைக்குழு - 2021
  iv. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு - 2021
  v. ஆட்பதிவுத் திணைக்களம் - 2021
  vi. தொழிநுட்ப அமைச்சு - 2021
  vii. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு - 2021
  viii. தேர்தல் ஆணைக்குழு - 2021
  ix. எல்லை நிர்ணய ஆணைக்குழு - 2021
  x. ஜனாதிபதி அலுவலகம் - 2021

- **வருடாந்த அறிக்கைகள்**
  i. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு - 2016/2017/2018/2019
  ii. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவராண்மை நிறுவனம் - 2016/2017/2018

- **ஏனையவை**
  i. தேர்தல் ஆணைக்குழு - 2020 ஆம் ஆண்டுக்கு முன்பு நடாத்தப்பட்ட தேர்தல் வாக்கெடுப்புக்களுக்கு ஏற்புடைய அறிக்கைகள்
  ii. தேர்தல் ஆணைக்குழு - 2020 ஆம் ஆண்டின் தேர்தல் அறிக்கைகள்

## 3.0 சட்ட அலுவல்கள்

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் விடயப் பரப்பின் கீழ் வரும் பல்வேறுபட்ட சட்டரீதியான பணிகளுக்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்கள் மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் அமைச்சுப் பதவி வகிக்கின்ற ஏனைய அமைச்சுக்களுக்கு ஏற்புடைய சட்டரீதியான அலுவல்கள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மற்றும் ஏனைய நீதிமன்றங்களில் கௌரவ பிரதம அமைச்சரை மற்றும்/ அல்லது பிரதம அமைச்சரின் செயலாளரைப் பிரதிவாதியாக்கி தொடரப்பட்டுள்ள வழக்கு அலுவல்கள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய ஏற்புடைய தரப்பினருடன் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- 2022 ஆம் ஆண்டில் (2022.09.30 ஆந் திகதி வரை) சட்டப் பிரிவுக்கு கிடைத்துள்ள வழக்குத் தொடர்தல்களுக்கு ஏற்புடைய அழைப்பாணைகளின் எண்ணிக்கை பின்வருமாறு.

  1. உயர்நீதிமன்ற வழக்குக் கோப்புகள் - 22
  2. மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குக் கோப்புகள் - 12

- மேலே குறிப்பிடப்பட்ட சகல வழக்குக் கோப்புகள் சம்பந்தமான பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், ஏற்புடைய பதிலிப் பத்திரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும் தேவையான சந்தர்ப்பங்களில் கௌரவ சட்டமா அதிபருக்கு அவதானிப்புக்கள் மற்றும் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.

- கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் பங்குபற்றுகின்ற சட்ட அலுவல்கள் சம்பந்தமான கூட்டங்கள், விசேட சந்திப்புக்கள் போன்றன சம்பந்தமாக எதிர்பார்க்கப்படும் பங்களிப்புக்களை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சரவைப் பத்திரங்கள் சம்பந்தமாக தேவையானவாறு ஒத்துழைப்பினை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ❖ பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் குத்தகைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிட வளாகங்களின் குத்தகை ஒப்பந்த வரைவுகள் மற்றும் ஏனைய ஒப்பந்த வரைவுகளைப் பகுப்பாய்வு செய்து விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- ❖ சட்டப் பிரிவுக்கு முன்வைக்கப்பட்ட பொது முறைப்பாடுகளை சமர்ப்பிக்கின்ற நபர்களுக்கு அவர்களின் சிக்கல்களைக் கருத்திற்கொண்டு சட்ட ஆலோசனைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஏற்புடைய நிறுவனங்களுக்கு குறித்த முறைப்பாடுகளை அனுப்பி ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

- ❖ சட்டப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு கோப்புக்களை அவதானித்து அவற்றுக்கு ஏற்புடைய குறிப்புக்கள் மற்றும் விதந்துரைகளை ஏற்புடைய பிரிவுகளுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ❖ பின்வரும் சட்ட வரைவுகளைத் திருத்துதல் மற்றும் சட்ட வரைவுகளைத் தயாரித்தல் சம்பந்தமாக சட்ட மா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம் மற்றும் ஏற்புடைய அமைச்சுக்களின் செயலாளர்களுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

    i. இறைச்சிக் கடைக்காரர் சட்டம் மற்றும் விலங்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கான வரைவு
    ii. 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம்
    iii. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்திற்கு ஏற்புடைய திருத்தங்கள் (மாகாண சபைகள் சட்டம், மாநகர சபைகள் சட்டம், நகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைகள் சட்டம் உட்பட)

## 4.0 சமய அலுவல்கள்

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் தேசிய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்ற சமய நிகழ்ச்சிகள் மற்றும் சமய வைபவங்கள் தொடர்பாகவும், சமய அலுவல்கள் சம்பந்தமாக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாகவும், சமய விடயம் சம்பந்தமாக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் வழங்கப்படுகின்ற வாழ்த்துச் செய்திகள் மற்றும் அனுதாபச் செய்திகள் தொடர்பாகவும் உள்ள அலுவல்கள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 4.1 சமய அலுவல்கள் சம்பந்தமாக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான அலுவல்களை மேற்கொள்ளுதல்

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் தேசிய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்ற சமய நிகழ்ச்சிகள் மற்றும் சமய வைபவங்கள் சம்பந்தமாகவும் சமய அலுவல்கள் சம்பந்தமாகவும் சங்கைக்குரிய தேரர்களினாலும், ஏனைய சமயத் தலைவர்களினாலும், பல்வேறுபட்ட தரப்பினராலும் கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு நாளாந்தம் அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தமான ஒருங்கிணைப்பு மற்றும் தொடராய்வு அலுவல்கள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கேற்ப, இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் இது வரை இந்தப் 366 கடிதங்கள் சம்பந்தமாக தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.2 போயா தின தர்மப் பிரசங்க நிகழ்ச்சிகளை நடாத்துதல்

அறிவுஞானம் மிகுந்த சிறந்த சமூகமொன்றை உருவாக்குவதற்காக புத்த மதத்தின் போதனைகளைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கத்தை முன்னிறுத்தி போயா தின தர்மப் பிரசங்க புண்ணிய நிகழ்வினை 2022.01.01 ஆந் திகதி முதல் 2022.09.30 ஆந் திகதி வரை ஒவ்வொரு மாதமும் போயா தினத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் 2022 ஆம் ஆண்டு வெசாக் போயா மற்றும் பொசொன் போயாவை முன்னிட்டு விசேட தர்மப் பிரசங்க நிகழ்ச்சிகளை சிறிமதீபாய வளாகத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 4.3 ஆசிச் செய்திகள் மற்றும் அனுதாபச் செய்திகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுதல்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அரச தலைவர்களின் வருகையின்போது மற்றும் தேசிய தினங்கள் சார்ந்து நடாத்தப்படுகின்ற பல்வேறுபட்ட வைபவங்களை மையப்படுத்தி நினைவிதழ்கள் வெளியிடப்படும் சந்தர்ப்பங்களில், அதற்கு கௌரவ பிரதம அமைச்சரின் ஆசிச் செய்தியொன்று வழங்கப்படுவதுடன், சங்கைக்குரிய தேரர்கள் தொடர்பான நாயக்க பதவி அக்தபத்திரங்கள் வழங்குதல், விகாரைகளின் ஆண்டுப் பூர்த்தி நிகழ்வுகள் போன்ற விசேட சந்தர்ப்பங்களை மையப்படுத்தி, கௌரவ பிரதம அமைச்சருக்கு முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு ஏற்ப ஆசிச் செய்திகள் வழங்குதல் என்பன பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 4.4 விசேட சமய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

கௌரவ பிரதம அமைச்சரின் பங்கேற்புடன், அவரது தலைமையில் தேசிய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்ற விசேட சமய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் அவற்றுகான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டன. அதற்கேற்ப கொழும்பு கங்காராமை விகாரையின் 43 ஆவது நவம் மகா பெரஹரா 2022 பெப்ரவரி 15 - 16 ஆந் திகதிகளில் வீதி வலம் வருவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் 2022 ஆம் ஆண்டு வெசாக் போயா தினத்தை முன்னிட்டு மே மாதம் 15 - 17 ஆகிய திகதிகளில், பொசான் மாதம் 14 - 16 ஆகிய தினங்களில் கங்காராமை விகாரை சார்ந்த அன்னதானத்திற்கான வசதிகளை வழங்குதல் என்பன பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

## 5.0 பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல்

கௌரவ பிரதம அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும் பொது மக்களின் கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகளை மிகவும் வினைத்திறனுடன் மற்றும் பயன்மிக்க வகையில் முகாமைத்துவப்படுத்துவது பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. அதன் கீழ் பின்வருமாறு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பொது மக்களின் கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகளைத் துரிதமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு அலுவல்களைச் செய்தல்.
- பொது மக்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பான முன்னேற்றத்தைக் கண்டறிதல்.
- பொதுமக்களின் யாப்புரீதியான உரிமைகளை வலுப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- பொதுசனத் தொடர்புகள் பிரிவுக்குக் கிடைக்கின்ற தகவல்கள் மற்றும் முன்மொழிவுகளை கொள்கைகளை வகுக்கும் நிறுவனங்களுக்குச் சமர்ப்பித்தல்.
- பொதுமக்களின் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அரச நிறுவனங்களுடன் பலமான ஒருங்கிணைப்பினைக் கட்டியெழுப்புதல்.
- தரவு முகாமைத்துவ அமைப்பு ஊடாக பொதுசனத் தொடர்புகள் பிரிவுக்கு கிடைக்கின்ற கோரிக்கைகளை மிகவும் வினைத்திறன்மிக்கதாகவும், துரிதமாகவும் ஏற்புடைய பிரிவுகளுக்கு அனுப்புதல் மற்றும் அந்தப் பணி உரியவாறு முகாமைத்துவம் செய்யப்பட்டு, கண்காணிக்கப்படுவதுடன், ஏற்புடைய தரவுகளைப் பகுப்பாய்வு செய்து அறிக்கைகள் தயாரித்தல்.

## 5.1 பொதுசனத் தொடர்புகள் பிரிவின் ஆவண முகாமைத்துவ அமைப்பு (Document Management System)

- பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகளை மிகவும் வினைத்திறன்மிக்கதாக, துரிதமாக ஏற்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும், அந்தப் பணியை முறையாக முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புச் செய்வதற்கும் தரவு முகாமைத்துவ அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.
- கௌரவ பிரதம அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற பொதுமக்களின் மனக்குறைகள் மற்றும் முறைப்பாடுகள் பொதுசனத் தொடர்புகள் பிரிவுக்கு கிடைக்கும்போது, அது கிடைக்கப்பெற்றதாக அலுவலக குறிப்பிலக்கத்துடன் குறுஞ் செய்தியொன்று ஊடாக மனக்குறை அல்லது முறைப்பாட்டினை சமர்ப்பித்த நபருக்குத் தொடர்பாடல் செய்வது இதன் முக்கிய பணியாகும்.



## 2022 ஜனவரி 01 ஆந் திகதி முதல் 2022 செப்டம்பர் 30 ஆந் திகதி வரை கிடைக்கப்பெற்ற பொதுமக்கள் கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகள்

| | |
|---|---|
| கௌரவ பிரதம அமைச்சருக்கு கடிதம் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் சிக்கல்கள்/ மனக்குறைகள்/ கோரிக்கைகளின் எண்ணிக்கை | 21,812 |
| மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட பொதுமக்களின் சிக்கல்கள்/ மனக்குறைகள்/ கோரிக்கைகளின் எண்ணிக்கை | 937 |
| பெக்ஸ் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட பொதுமக்களின் சிக்கல்கள்/ மனக்குறைகள்/ கோரிக்கைகளின் எண்ணிக்கை | 338 |
| சேவைபெறுநர்களை நேரடியாக சந்தித்தல் | 696 |
| கிடைத்த தொலைபேசி அழைப்புக்களின் எண்ணிக்கை | 8,120 |
| **மொத்தம்** | **31,903** |

## 6.0 முறையான மற்றும் சிறந்த தாபனச் செயற்பாடு

### 6.1 நிர்வாக மற்றும் நடவடிக்கைகள் முகாமைத்துவம்

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஒட்டுமொத்த செயல்திறனை உயர் தரத்துடன் பேணிச் செல்வதற்கு அவசியமான மனித வளத்தினை வினைத்திறன் மிக்கதாகவும், பயனுறுதி வாய்ந்த முறையிலும் பயன்படுத்துவதற்குத் தேவையான நிர்வாக அலுவல்கள், நடவடிக்கை முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது. தற்காலத்தில் நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலைமையினைக் கருத்திற்கொண்டு கௌரவ பிரதம அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்களினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி ஒவ்வொரு பிரிவுக்கும் குறைந்தபட்ச பணியாட்தொகுதியை மாத்திரம் பேணிச் செல்வது தொடர்பாக கவனத்தை ஈர்த்து, காணப்பட்ட நிறுவனக் கட்டமைப்பினைத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### 6.2 மனித வள அபிவிருத்தி

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அலுவலர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளை விருத்தி செய்வதன் மூலம் அலுவலகத்தின் அலுவல்களை வினைத்திறனுடனும், பயன்மிக்க வகையிலும் மேற்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குவதன் ஊடாக சேவையின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு அலுவலர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

**2022.01.01 முதல் 2022.09.30 வரையான காலப்பகுதியினுள் வழங்கப்பட்டுள்ள உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சிப் பாடநெறி நிகழ்ச்சிகள்**

| தொடரிலக்கம் | பயிற்சிப் பாடநெறி | உள்நாட்டு/ வெளிநாட்டு | காலப் பகுதி |
|---|---|---|---|
| **01** | Diploma in English for Junior Executives | உள்நாட்டு | 2022 |
| **02** | Web Development Program | உள்நாட்டு | 2022 |
| **03** | தனிநபர் அபிவிருத்திப் பயிற்சி செயலமர்வு | உள்நாட்டு | 2022/03/21 - 22 |

| | | | |
|---|---|---|---|
| **04** | 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு ஏற்ப தமிழ் மொழிப் பாடநெறிகளை நடாத்துதல் | உள்நாட்டு | 150 மணித்தியாலங்கள் |
| **05** | பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அடிப்படை உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் தொடர்பான சான்றிதழ் பாடநெறி - 2022 - இரண்டாவது குழு | உள்நாட்டு | 2022/09/15 முதல் 2022/10/20 வரை (06 நாட்கள்) |
| **06** | பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அடிப்படை உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் தொடர்பான சான்றிதழ் பாடநெறி - 2022 - மூன்றாவது குழு | உள்நாட்டு | 2022/09/15 முதல் 2022/10/20 வரை (06 நாட்கள்) |
| **07** | Training on Managing Evaluations for Public Officials | உள்நாட்டு | 2022/09/26 முதல் 2022/09/30 வரை |
| **08** | Australia Awards Scholarship -2022 | வெளிநாட்டு | 2022 - 2023 |
| **09** | Short Course of Promoting Value Chain Improvements, Market Integration and Trade in Agribusiness – Australia | வெளிநாட்டு | 2022/08/08 முதல் 2022/08/19 வரை |
| **10** | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவது தொடர்பான ஆய்வு - பாகிஸ்தான் | வெளிநாட்டு | 2022/02/21 முதல் 2022/02/28 வரை |
| **11** | Executive Training Program for Sri Lankan Special Grade Officers – Pakistan | வெளிநாட்டு | 2022/03/21 முதல் 2022/04/03 வரை |
| **12** | Seminar on Internet of Things (IOT) Technology for countries under belt and road initiative (online) | வெளிநாட்டு | 2022/07/15 முதல் 2022/08/04 வரை |

## 6.3 பிரதம அமைச்சர் அலுவலகத்தினுள் உற்பத்தித்திறன் எண்ணக்கருவைச் செயற்படுத்தல்

பிரதம அமைச்சர் அலுவலகத்திற்குச் சொந்தமான வளங்களை வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்கதாகப் பயன்படுத்தல், உள்ளக மற்றும் வெளியக சேவைபெறுநர்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையினை வழங்குதல் ஆகிய நோக்கங்களை முன்னிறுத்தி அலுவலகத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. அதற்கேற்ப அலுவலக உத்தியோகத்தர்களுக்கு உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் தொடர்பான அடிப்படை சான்றிதழ் பாடநெறியொன்றை 03 குழுக்களாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் முதலாவது குழு பாடநெறியை சிறப்பாக கற்று நிறைவு செய்ததுடன், எஞ்சிய 02 குழுக்களுக்குப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஒட்டுமொத்த பணியாட்தொகுதிக்கும் உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் தொடர்பாக கோட்பாட்டுரீதியான மற்றும் நடைமுறைரீதியான அறிவை வழங்குதல் மற்றும் அதன் மூலம் கூட்டு அணுகுமுறையொன்று ஊடாக எதிர்வரும் ஆண்டில் உற்பத்தித்திறன் விருதுப் போட்டியில் பங்குபற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

## 6.4 சிறப்பாக அரச செலவினத்தை முகாமைத்துவம் செய்வதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல் (டிஜிட்டல்மயப்படுத்தல்)

நிலவும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக அரச செலவினத்தைக் கட்டுப்படுத்தி, மிகவும் நவீன சேவையொன்றை வழங்குவதற்காக டிஜிட்டல் அரச சேவையொன்றை உருவாக்கும் நோக்கத்தினை முன்னிறுத்தி பிரதம அமைச்சர் அலுவலகம் தனது அலுவல்களை மேற்கொள்வதுடன், மக்களை மையப்படுத்திய வினைத்திறன்மிக்க சேவையொன்றை வழங்குவதனை உறுதிப்படுத்தும் வகையில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தகவல்கள் உள்ளடங்கிய உத்தியோகபூர்வ இணையத்தளம் நிதமும் இற்றைப்படுத்தப்படுகிறது. நிலவும் பொருளாதார சவால்களின் மத்தியில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அலுவல்களைப் பயனுறுதிவாய்ந்த முறையில், தடையின்றி நடாத்திச் செல்வதற்காக உள்ளகரீதியாகத் தயாரிக்கப்பட்ட மென்பொருள் அமைப்புக்கள் நிதமும் மேம்படுத்தப்படுவதுடன். அரச செலவினத்தைக் குறைப்பதற்காக புதிய தகவல் தொழிநுட்பப் பாவனைகளும் பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றன. அதற்கேற்ப சரியான தகவல்களைச் செலுத்துவதற்கு மற்றும் நவீன சைபர் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள முடியுமான வகையில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் சகல தரவு அமைப்புக்களுக்கும் சைபர் பாதுகாப்பு ஏற்பாடுகள் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், அவை நிதமும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன.

## 6.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம்

பிரதம அமைச்சரின் செயலாளரினால் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடப்படுகின்ற கணக்காய்வு அறிக்கைகளை வழங்குதல், பிரதான உள்ளக கணக்காய்வாளரின் காலாண்டுரீதியான மதிப்பீட்டு அறிக்கைகளை தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்புதல் மற்றும் அந்த நிறுவனங்களின் வழிகாட்டலுக்கு அமைவாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல் என்பன பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கணக்காய்வுப் பிரிவினால் உரிய காலச் சட்டகங்களினுள் மேற்கொள்ளப்படுகின்றன.

**2022.01.01 ஆந் திகதி முதல் 2022.09.30 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவப் பணிகள்**

| இலக்கம் | திகதி | பணி |
|---|---|---|
| 1 | 2022.03.09 | முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப ஆண்டின் முதலாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தினை நடாத்துதல் |
| 2 | 2022.09.02 | முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப ஆண்டின் இரண்டாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தினை நடாத்துதல் |
| 3 | 2022.01.11<br>2022.04.27<br>2022.07.25 | பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் மதிப்பீட்டு அறிக்கையினைக் காலாண்டுரீதியாக முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்புதல்<br>• 2021 நான்காவது காலாண்டிற்கான மதிப்பீட்டு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது<br>• 2022 முதலாவது காலாண்டிற்கான அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது<br>• 2022 முதலவது காலாண்டிற்கான மதிப்பீட்டு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது |
| 4 | 2022.04.29<br>2022.08.10 | 2009.06.09 ஆந் திகதிய, DMA/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கு ஏற்ப காலாண்டுரீதியான அறிக்கைகளை தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்புதல் |

| | | |
|---|---|---|
| **5** | <br><br><br><br>2022.03.14<br><br><br><br>2022.09.29 | காலாண்டுரீதியாக உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்புதல் (படிவம் 6)<br><br>• காலாண்டுரீதியான அறிக்கைகளை சமர்ப்பித்தல் - முதலாவது காலாண்டு<br><br>• காலாண்டுரீதியான அறிக்கைகளை சமர்ப்பித்தல் - 2 ஆவது காலாண்டு |
| **6** | 2022.03.02<br>2022.04.29<br>2022.05.18<br>2022.06.17<br>2022.06.20<br>2022.07.06<br>2022.07.28<br>2022.08.29<br>2022.08.30 | உள்ளகக் கணக்காய்வு அலுவல்களைச் செய்தல் மற்றும் கணக்காய்வு அவதானிப்புக்கள் விதந்துரைகளுடன் பிரதம அமைச்சரின் செயலாளருக்கு அறிக்கையிடுதல். |
| **7** | 2022.03.02<br>2022.05.04<br>2022.06.20<br>2022.08.12 | பிரதம அமைச்சரின் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விசேட கணக்காய்வுகளைச் செய்தல் |

## 6.6 போக்குவரத்து அலுவல்கள்

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பணியாட்தொகுதிக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை உரிய முறையில் வழங்குவதன் ஊடாக உயர்வான சேவை உற்பத்தித்திறன் ஒன்று எதிர்பார்க்கப்படுவதுடன், மிகவும் வினைத்திறன்மிக்க மற்றும் சிக்கனமான போக்குவரத்து முகாமைத்துவ அமைப்பொன்றை உருவாக்குவதற்காக ஒன்லைன் முறைமை ஊடாக கடதாசி இல்லாத எண்ணக்கருவை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கேற்ப, 2022.01.01 ஆந் திகதி முதல் 2022.09.30 ஆந் திகதி வரை போக்குவரத்துத் துறையின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- போக்குவரத்துப் பிரிவின் இடவசதிகள் வரையறுக்கப்பட்டதாக காணப்பட்டமையினால், மிகவும் வினைத்திறன்மிக்க சேவைச் சூழலொன்றுக்காக சிறிமதீபாய வளாகத்தில் உள்ள சேவைக் கட்டிடத்தில் போக்குவரத்துப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.
- இருப்பு வாகனங்களை ஒதுக்குவதற்காக இது வரை காணப்பட்ட எழுத்து மூலமான கோரிக்கைக்குப் பதிலாக WhatsApp ஊடாக புதிய படிவமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், கடதாசி இல்லாத (Paperless) எண்ணக்கரு அதன் மூலம் செயற்படுத்தப்பட்டது.
- விடுமுறைக்கான அனுமதியையும் WhatsApp படிவமொன்று ஊடாக மேற்கொள்வது போக்குவரத்துப் பிரிவினுள் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதில் கிடைக்கும் முன்னேற்றத்தின் அடிப்படையில் ஒட்டுமொத்த அலுவலகத்திற்கும் அதனைச் செயற்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படும்.
- பணியாட்தொகுதி மற்றும் சாரதிகளின் அறிவினை விருத்தி செய்யும் நோக்குடன் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் பாதுகாப்பாக வீதியில் செலுத்துதல் மற்றும் காப்புறுதி நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும்போது பின்பற்ற வேண்டிய முறைமை தொடர்பாக குறுங்காலப் பயிற்சியொன்று வழங்கப்பட்டது.
- நவீன மற்றும் பிரமுகர் வாகனங்கள் பாவனை மற்றும் பொதுவாக சாரதி ஒருவர் அறிந்திருக்க வேண்டிய விடயங்கள் தொடர்பான செயலமர்வொன்றை எதிர்காலத்தில் ஏற்பாடு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதனூடாக சாரதிகளின் அறிவினை மேம்படுத்தி, அவர்களின் வினைத்திறனை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 7.0 சர்வதேச அலுவல்கள்

கௌரவ பிரதம அமைச்சர் சார்பில் இராஜதந்திரத் தொடர்புகளுடைய இராஜதந்திர மற்றும் கன்சியுலர் அலுவல்கள் சம்பந்தமான செயற்பாடுகள் மற்றும் சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் நிதமும் நிறைவேற்றப்படுகின்றன.

**2022.01.01 ஆந் திகதி முதல் 2022.09.30 ஆந் திகதி வரை வெளிநாட்டுப் பிரமுகர்களின் உத்தியோகபூர்வ இலங்கை விஜய சந்தர்ப்பங்களுக்காக பிரதம அமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்ற இராஜதந்திர சந்திப்புக்கள்**

| மாதம் | உத்தியோகபூர்வ விஜயங்களின் எண்ணிக்கை |
|---|---|
| **ஜனவரி** | 04 |
| **பெப்ரவரி** | 02 |
| **மார்ச்** | 05 |
| **ஏப்ரல்** | 00 |
| **மே** | 34 |
| **ஜூன்** | |
| **ஜூலை** | |
| **ஆகஸ்ட்** | 10 |
| **செப்டம்பர்** | 07 |

**2022.01.01 ஆந் திகதி முதல் 2022.09.30 ஆந் திகதி வரை ஏற்பாடு செய்யப்பட்ட இராஜதந்திர சந்திப்புக்கள்**

| மாதம் | இராஜதந்திர சந்திப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|
| **ஜனவரி** | 03 |
| **பெப்ரவரி** | 08 |
| **மார்ச்** | 02 |
| **ஏப்ரல்** | 00 |
| **மே** | 13 |
| **ஜூன்** | |
| **ஜூலை** | |
| **ஆகஸ்ட்** | 13 |
| **செப்டம்பர்** | 6 |

**கௌரவ பிரதம அமைச்சர் சார்பில் 2022.01.01 ஆந் திகதி முதல் 2022.09.30 ஆந் திகதி வரை வெளியிடப்பட்ட அச்சிடப்பட்ட வாழ்த்துச் செய்திகள், வாழ்த்துக்கள் மற்றும் அனுதாபச் செய்திகள் (உள்நாட்டு, வெளிநாட்டு)**

| மாதம் | செய்திகளின் எண்ணிக்கை (உள்நாட்டு/ வெளிநாட்டு) |
|---|---|
| **ஜனவரி** | 02 |
| **பெப்ரவரி** | 01 |
| **மார்ச்** | 01 |
| **ஏப்ரல்** | 02 |
| **மே** | 10 |
| **ஜூன்** | |
| **ஜூலை** | |
| **ஆகஸ்ட்** | 01 |
| **செப்டம்பர்** | 03 |


## 8.0 ஊடகம் மற்றும் தொடர்பாடல்

கௌரவ பிரதம அமைச்சர், பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் பிரதம அமைச்சரின் கீழுள்ள அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி மற்றும் சமூகப் பணிகள் தொடர்பாக அறியப்படுத்துவதற்காக ஒழுங்கான, முறையான, வலுவான ஊடகப் பாவனையொன்று அவசியமாகும். அத்துடன், கௌரவ பிரதம அமைச்சர், பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் பிரதம அமைச்சரின் கீழுள்ள அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்ட கடந்தகால, தற்கால செயற்பணிகளை எதிர்காலத்திற்காகப் பாதுகாத்து வைப்பதும் அவசியமான பணியாகும்.


அதற்கேற்ப பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஊடக மற்றும் தொடர்பாடல் அலுவல்களை வினைத்திறன்மிக்கதாகவும், உற்பத்தித்திறன்மிக்கதாகவும் மேற்கொள்வதற்காக பின்வரும் அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ கௌரவ பிரதம அமைச்சரின் அறிவுறுத்தலின்படி பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் செயற்படுத்தப்படுகின்ற பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக ஊடகங்கள் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்தல்.
- ❖ கௌரவ பிரதம அமைச்சரின் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாடுகளுக்கு ஏற்புடைய காட்சிகள் / புகைப்படங்கள் / அறிக்கைகளைப் பாதுகாத்தல்.
- ❖ அரசின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஊடகக் கொள்கையினைச் செயற்படுத்தும்போது பங்களிப்பு மற்றும் ஒருங்கிணைப்பினை வழங்குதல்.

ஊடக மற்றும் தொடர்பாடல் அலுவல்கள் பின்வரும் அலகுகளின் கீழ் செயற்படுத்தப்படுகின்றன.




## 8.1 ஊடக மற்றும் தொடர்பாடல் அலுவல்கள் செயற்பாடு



இதில் கலந்துரையாடல்கள், வைபவங்கள், ஊடகக் கலந்துரையாடல்களுக்கு ஊடக ஒருங்கிணைப்பினையும் அதற்கு ஏற்புடைய செய்தி அறிக்கைகளையும் வெளியிடுவது பிரதான பணியாக உள்ளதுடன், கௌரவ பிரதம அமைச்சரின் செய்திகளை ஊடகங்களுக்கு வெளியிடுவதும் மேற்கொள்ளப்படுகிறது. இந்த செயற்பாட்டில் ஊடக சந்திப்புக்களை ஏற்பாடு செய்தல், செய்தி அறையை (NEWS ROOM) நடாத்திச் செல்லுதல், அரசியல் கட்டுரைகளுக்குத் தகவல்களை வழங்குதல் போன்ற பணிகள் ஏற்புடைய காலப்பகுதிகளினுள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 9.0 நிதி முன்னேற்றம்

வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டின் செலவினத் தலைப்பு இலக்கம் 02 இன் கீழ் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் செலவினங்களை மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கேற்ப, 2022 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினங்களுக்காக 1,213.45 மில்லியன் ரூபாயும், மூலதனச் செலவினங்களுக்காக 229.3 ரூபாயும் என மொத்தமான ஒதுக்கீடாக 1,442.75 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2022 செப்டம்பர் 30 ஆந் திகதியில் கருத்திட்டரீதியான ஒதுக்கீடுகளின் நிதி முன்னேற்றத்தின் சாராம்சம் பின்வருமாறு.

| கருத்திட்டம் / உப கருத்திட்டம் | மொத்த ஒதுக்கீடு (ரூ. மில்.) | | 2022.09.30 வரையான நிதி முன்னேற்றம் (ரூ. மில்.) | | | |
|---|---|---|---|---|---|---|
| | மீண்டெழும் | மூலதன | மீண்டெழும் | | மூலதன | |
| பிரதம அமைச்சர் அலுவலகம் | 760.0 | 214.5 | 408.3 | 53.7% | 70.0 | 34.2% |
| பொது நிர்வாகம் மற்றும் தாபனச் சேவைகள் | 453.5 | 14.8 | 295.7 | 65.2% | 6.5 | 43.9% |
| **மொத்தம்** | **1,213.45** | **229.3** | **704.0** | **58.0%** | **76.5** | **33.4%** |

2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பணியாட்தொகுதி 552 ஆகக் காணப்பட்டதுடன், 2022 ஆகஸ்ட் மாதமளவில் "அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தல்" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அந்தப் பணியாட்தொகுதி 280 வரை கௌரவ பிரதம அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் குறைக்கப்பட்டது.

அத்துடன், கடந்த காலத்தில் பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகை வளாகத்தில் மின்சாரப் பராமரிப்பு அலுவல்கள் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டதுடன், புதிய செலவினங்களைக் குறைக்கும் தேவைப்பாட்டின் அடிப்படையில் அந்த அலுவல்கள் 2022 இரண்டாவது காலாண்டு முதல் இலங்கை கடற்படைக்கு ஒப்படைக்கப்பட்டதுடன், அதனூடாக வருடாந்தம் ரூ.27 மில்லியன் அளவில் சேமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.